வளிமண்டலவியல் திணைக்களம்

2015 ஆம் ஆண்டில் வளிமண்டலவியல் திணைக்களத்தின் நிர்வாக அறிக்கை

1. அறிமுகம் 4

1.1 பின்னணி 4

1.2 கடமைகள் 4

1.3 நிறுவனக் கட்டமைப்பு 5

1.4 பிரதான பிரிவுகளின் பொறுப்புகள் 5

2.செயலாற்றுகை 8

2.1 வளிமண்டலவியல் தரவு வலைப்பின்னல் 8

2.1.1.வளிமண்டலவியல் அவதானிப்புகள் 8

2.1.1.1. மேற்பரப்பு அவதானிப்புகள் 8

2.1.1.1.1. சுருக்கமான வளிமண்டலவியல் அவதானிப்புகள் 8

2.1.1.1.2. மழைவீழ்ச்சித் தகவல்கள் 9

2.1.1.1.3. வேளாண்மை வளிமண்டலவியல் தகவல்கள் 9

2.1.1.2. மேற்பகுதி வளிமண்டலத்தின் அவதானிப்புகள் 10

2.1.2. தரவு கட்டுப்பாடு மற்றும் ஆவணமயமாக்கல் 11

2.1.3.தரவு விநியோகம் 11

2.2. பொது மக்களுக்கு, பல்வேறு நிறுவனங்களுக்கு,பல்வேறு தொழில்களுடன் இணைந்துள்ள சமூகங்களுக்கு மற்றும் உலகளாவிய வளிமண்டலவியல் அவதானிப்பு வலையமைப்புகளுக்கு தகவல் வழங்குதல் 12

2.2.1. பொது மக்களுக்கு நாளாந்தம் வழங்கும் தகவல்கள் 12

2.2.2. உலக அவதானிப்பு வலையமைப்புகளுக்கு தரவு வழங்குதல் 12

2.2.3. பல்வேறு நிறுவனங்களுக்கு, பல்வேறு தொழில்களுடன் இணைந்துள்ள சமூகங்களுக்கு தகவல் வழங்குதல் 13

2.3. விமானப்போக்குவரத்து வளிமண்டவியல் தகவல்களை விமானச் சேவைகளிடம் வழங்குதல் மற்றும் கடற்படை செயற்பாடுகளின் பொருட்டு சேவை வழங்குதல் 13

2.3.1. விமானப்போக்குவரத்து வளிமண்டவியல் தகவல்களை விமானச் சேவைகளிடம் வழங்குதல் 13

2.3.1.1கட்டுநாயக்கா விமான நிலையம் 13

2.3.1.2. மத்தளை சர்வதேச விமான நிலையம் 14

2.3.1.3. இரத்மலானை விமான நிலையம் 14

2.3.2. கடல்சார் செயற்பாடுகளுக்கு வளிமண்டலவியல் சேவைகளை வழங்குதல 14

2.3.2.1. கடல்சார் செயற்பாடுகளுக்கு வளிமண்டலவியல் சேவைகளை வழங்குதல் (Shipping Report) 14

2.3.2.2. சர்வதேச கடற் பிரதேசத்தின் காலநிலை அறிக்கை (Fleet Forecast) 15

2.4. சுனாமி மற்றும் மோசமான காலநிலை தொடர்பான முன்னெச்சரிக்கை மற்றும் ஆலோசனை வழங்குதல் 15

2.4.1. சுனாமி அணர்த்த தகவல்கள் 15

2.4.2. மோசமான காலநிலை அறிவிப்புகள் 16

2.5. பொது மக்களை அறிவுறுத்தல் 16

2.5.1. பொது மக்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சிகள் 16

2.5.1.1. பிரதான அலுவலகத்தை பார்வையிடுவதற்கு வருபவர்கள் 16

2.5.1.2. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 17

2.5.1.3. நடாத்தப்பட்ட மாநாடுகள்/பயிற்சிப் பட்டறைகள் 18

2.5.1.3.1. உலக வளிமண்டலவியல் தினம் 18

2.5.1.3.2. பருவக்கால கருத்தரங்கு 18

2.5.2 .வளிமண்டலவியல் கருவிகளும் உபகரணங்களும் 18

2.5.2.1. உபகரணப் பிரிவு 19

2.5.2.2. இலத்திரனியல் பொறியியல் பிரிவு 19

2.6. ஆராய்ச்சி 19

2.7. வரையறுக்கப்பட்ட வானியல் சேவைகளை வழங்கல் 20

2.8. திணைக்களத்தின் அபிவிருத்திப் பணிகள். 20

2.8.1. நிலையான இயக்கச் செயற்பாடு 20

2.8.2. நடாத்தப்பட்ட பயிற்சி/கருத்தரங்குகள 20

2.9.பங்கு பற்றிய கூட்டங்கள்/பயிற்றுவிப்புகள்/கருத்தரங்குகள்/பயிற்சி பட்டறைகள் 20

2.9.1. வெளிநாட்டு விஜயங்கள் (கூட்டங்கள்/பயிற்றுவிப்புகள்/கருத்தரங்குகள்/பயிற்சி பட்டறைகள்) 20

2.9.2. உள்நாட்டு பயிற்றுவிப்புகள் 27

3. நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவின் செயலாற்றுகை 30

3.1. நிர்வாகப் பிரிவு 30

3.1.1. ஆட்சேர்ப்பு/ வெற்றிடங்களை பூர்த்திசெய்தல் 30

3.1.2. ஓய்வுபெறல்/பதவி விலகல்/விடுவித்தல்/பதவி வெறிதாக்கல்/இறப்புகள் 30

3.1.3. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீண்டும் இணைத்துக்கொள்ளுதல் 30

3.1.4. உரிய வினைத்திறன்காண் தடை பரீட்சைகள் மற்றும் திணைக்களத்து பரீட்சைகள் என்பன நடாத்தல் 31

3.1.5. நிருமாணிப்பு நடவடிக்கைகள் 31

3.2. நிதிப்பிரிவு 31

3.2.1 வருமானம் 31

4. நன்றி நவிலல் 37

1. அறிமுகம்

1.1 பின்னணி

1967 ஆம் ஆண்டு நில அளவைகள் திணைக்களத்தின் கீழ் முறையாக வளிமண்டலவியல் அவதானிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. வளிமண்டலவியல் நடவடிக்கைகளின் பொருட்டு பிரிதொரு பிரிவாக "கொழும்பு அவதானிப்பு ஆய்வு நிலையம்" 1909 ஆம் ஆண்டு தற்போதுள்ள இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. காலநிலை மற்றும் வானிலை சேவைகளை வழங்கும் பிரதான நோக்கத்துடன் குறித்த கொழும்பு அவதானிப்பு ஆய்வு நிலையம் 1948 ஆம் ஆண்டு சுயாதீன திணைக்களமாக்கப்பட்டது. தற்போது வளிமண்டலவியல் திணைக்களத்தின் செயற்பாடுகள், இடர் முகாமைத்துவ அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் செயற்படுகின்றது.

1.2 கடமைகள்

வளிமண்டலவியல் மற்றும் வானிலை சார்ந்த சேவைகளை வழங்கும் அரசாங்கத்தின் நியதிச்சட்ட அமைப்பாக பின்வரும் பிரதான கடமைகள் திணைக்களத்தால் நிறைவேற்றப்படுகின்றன.

1. சர்வதேச தரங்களுக்கமைவாக வானிலை மூலங்களை அவதானித்தல்.
2. அதிகாரம் பெற்ற தேசிய நிறுவனமாக காலநிலை மற்றும் வானிலை சேவைகளை வழங்கல்.
3. சுனாமி மற்றும் மோசமான வானிலை நிலைமைகள் தொடர்பான முன்னெச்சரிக்கை, தகவல் மற்றும் ஆலோசனை சேவைகள் என்பன வழங்கல்.
4. தேசிய மற்றும் சர்வதேச விமான சேவைகளுக்கு தேவையான வளிமண்டலவியல் சேவைகளை வழங்கல்.
5. வானிலை விஞ்ஞான தரவு தளத்தை பேணுதல்.
6. வளிமண்டலவியல் மற்றும் துணைவிடயங்கள் தொடர்பான கற்றல் மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்.
7. பொது மக்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்தல் மற்றும் அதற்காக ஒத்துழைப்பு வழங்கல்
8. நட்சத்திரவியல் மற்றும் புவிக்காந்தம் சார்ந்த வரையறுக்கப்பட்ட சேவைகளை வழங்கல்.

1.3 நிறுவனக் கட்டமைப்பு

பணிப்பாளர் நாயகத்தினால் நிர்வகிக்கப்படுவதுடன், திணைக்களத்தின் ஐந்து பணிப்பாளர்களின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பிரதான (05) பிரிவுகளும், அதனுடன் இணைந்துள்ள 11 உப பிரிவுகளையும் கொண்டமைந்துள்ளது.

தரவுகளை பெற்றுக்கொள்வதற்காக தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக 22 பிராந்திய வளிமண்டலவியல் நிலையங்களும், 36 தன்னியக்க வளிமண்டலவியல் அவதானிப்பு நிலையங்களும், 35 கமத்தொழில் வளிமண்டலவியல் நிலையங்களும், 400 மழைமானி நிலையங்களும் இத் திணைக்களத்தால் பேணப்படுகின்றன.

1.4 பிரதான பிரிவுகளின் பொறுப்புகள்

தொடர் இலக்கம்	பிரதானப் பிரிவு	உப பிரிவு	பொறுப்புகள்
1.	அவதானிப்பு வலைப்பின்னல் மற்றும் உபகரணங்கள்	1.1 உபகரணப் பிரிவு	வளிமண்டலவியல் உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் பேணுதல். அத்துடன் தளபாட மற்றும் தொழில்நுட்ப விடயங்களில் உதவிபுரிதல், கண்காட்சியில் பங்குபற்றுதல்.
		1.2 மின் மற்றும் இலத்திரனியல் பேணுகை பிரிவு	மின் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பேணுகை, தன்னியக்கவானிலை முறைமைகள் மற்றும் செய்மதித்தரவு பெறும் முறைமைகள் ஆகியவற்றை பேணுதல்.
		1.3 ரேடார்/ ரேடியோசொன்ட் பிரிவு (வானொலி பரப்பமைவு பிரிவு)	மேல் வளிமண்டலம் சார்ந்த அவதானிப்புகள், அந்த தகவல்களை ஆவணமயமாக்கல், திணைக்களத்திற்கு விஜயம் செய்யும் பார்வையாளர்களுக்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்தல்.
		1.4 பிராந்திய வளிமண்டலவியல் நிலையங்கள்	3 மணித்தியாலங்களுக்கொரு முறை வளிமண்டலவியல் அவதானிப்புகள், தொடர்ச்சியான வானிலை நிலைமைகளை அவதானித்தல் (6 மணித்தியாலங்களுக்கொருமுறை மேல் வளிமண்டல அவதானிப்புகளை பெற்றுக்கொள்ளுதல்(மேல் வளிமண்டல அவதானிப்பு நிலையம்)
2.	தரவு உருவாக்கம்	2.1 தரவு பிரிவு	தொடர்ச்சியாக தரவுகளை பதிவு செய்கின்ற உபகரணங்களின் தரவு தரக்

	மற்றும் சுவடிக்கூடம்		கட்டுப்பாடு மற்றும் சுவடிக்கூடம்.
		2.2 வானிலை பிரிவு	பிராந்திய நிலையங்களை கூட்டிணைத்தல், முகாமைத்துவம் மற்றும் வளிமண்டலவியல் தரவு தரக் கட்டுப்பாட மற்றும் தரவு சுவடியாக்கம்
		2.3 மழை வீழ்ச்சிப் பிரிவு	மழை வீழ்ச்சி நிலையங்களை கூட்டிணைத்தல், தரவுகளின் தரக்கட்டுப்பாடு மற்றும் சுவடியாக்கம்
		2.4 வேளான்மை வளிமண்டலவியல் பிரிவு	வேளான்மை வளிமணிடலவியல் வலையமைப்பு முகாமைத்துவம், தரவுகளின் தரக்கட்டுப்பாடு மற்றும் சுவடியாக்கம்
		2.5 கணினிப் பிரிவு	இலத்திரனியல் முறையில் தரவுகளின் தரக் கட்டுப்பாடு, சுவடியாக்கம், வானிலை தரவு தளத்தை பேணுதல், வெளித்தரப்பினருக்கு தரவுகளை விநியோகித்தல், திணைக்களத்தின் இணையதளத்தை பேணுதல் மற்றும் நவீனமயப்படுத்தல்.
		2.6 நூலகம்	நூலகம் பேணுதல்
		2.7 பதிவுஅறை	தரவுகள் மற்றும் தகவல்கள் என்பவற்றுக்கு ஏற்புடையதான அச்சீட்டு ஆவணங்களின் சுவடிகூடம்
3.	எதிர்வுகூறல் மற்றும் தீர்மானம் ஆகியவற்றுக்கு ஆதரவளித்தல்	3.1 தேசிய வளிமண்டலவியல் மற்றும் முன்னெச்சரிக்கை நிலையம்	வளிமண்டலவியல் தரவுகளின் வழிமுறையாக்கம் மற்றும் பகுப்பாய்வு காலநிலை தொடர்பான எதிர்வுகூறல் மற்றும் செய்திப்பரப்பல், சுனாமி மற்றும் வகாலநிலை அபாயம் தொடர்பாக தேசிய முன்னெச்சரிக்கை நிலையமாக செயற்படுதல்
		3.2 தொலை தொடர்பாடல் பிரிவு	வளிமண்டலவியல் தரவுகள்.'.அவதானிப்புகள் பரிமாற்றம், வானிலை தொடர்பான எதிர்வுகூறல், முன்னெச்சரிக்கை செய்திகளை பரப்புதல்
		3.3 விமானநிலைய வளிமண்டலவியல் அலுவலகங்கள்	சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு, (ICAO) மற்றும் உலக வளிமண்டலவியல் அமைப்பு என்பவற்றுக்கமைவாக விமான போக்குவரத்து சேவைகளுக்கு தேவையான வளிமண்டலவியல்

			தரவு தகவல்கள் என்பன வழங்குதல்
4.	ஆராய்ச்சி, பயிற்றுவிப்பு மற்றும் அபிவிருத்தி	4.1 ஆராய்ச்சிப் பிரிவு	வளிமண்டலவியல் மற்றும் வானிலை ஆராய்ச்சி ஆய்வுகளை நடாத்தல்
		4.2 பயிற்சிப் பிரிவு	பயிற்றுவிப்புகள் மற்றும் திணைக்களத்து பரீட்சைகளை நடாத்தல்
		4.3 வானிலை மாற்றங்களை சார்ந்த ஆய்வு நிலையம்	வானிலை மாற்றங்களுக்கு ஏற்புடையதான பணிகளை பேணுதல்
5.	நிர்வாகம் மற்றும் நிதி	5.1 தாபனப் பிரிவு	பதவியினர் தொடர்பான தாபன நடவடிக்கைகள்
		5.2 நிதிப் பிரிவு	நிதிசார் நடவடிக்கைகள்
		5.3 பெறுகைகள் பிரிவு	கொள்வனவு, களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகம்
		5.4 விசேட பெறுகை பிரிவு	வெளிநாடுகளில் மேற்கொள்கின்ற கொள்வனவு நடவடிக்கைகள்
		5.5 போக்குவரத்துப் பிரிவு	வாகனங்களை பேணுதல் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகள்
		5.6 நிருமாணிப்பு பிரிவு	திணைக்களத்திற்கு தேவையான கட்டிட நிருமாணிப்புகள் மற்றும் பேணல் தொடர்பான கூட்டிணைப்பு

2. செயலாற்றுகை

2.1 வளிமண்டலவியல் தரவு வலைப்பின்னல்

2.1.1 வளிமண்டலவியல் அவதானிப்புகள்

வளிமண்டலவியல் திணைக்களத்தின் அவதானிப்பு வலைப்பின்னலில் கிடைக்கக்கூடியதாகவுள்ள அவதானிக்கப்பட்ட வளிமண்டலவியல் தரவு, மேற்பரப்பு அவதானிப்புகள் மற்றும் மேல் வளிமண்டலவியல் தரவு என பொதுவாக வகைப்படுத்தலாம்.

2.1.1.1. மேற்பரப்பு அவதானிப்புகள்

2.1.1.1.1. சுருக்க வளிமண்டலவியல் அவதானிப்புகள்

மேற்பரப்பு சுருக்க வளிமண்டலவியல் அவதானிப்புகள் பிராந்திய அலுவலகங்கள் மட்டத்தில் 3 மணித்தியாலங்களுக்கொருமறை மேற்கொள்ளப்படுகின்றன. அதன் பின்னர் அவதானிக்கப்பட்ட தரவுகள் தொகுக்கப்பட்டு சர்வதேச ரீதியில் பரப்பும் முகமாக உலகலாவிய தொலைதொடர்பாடல் முறைமையின் ஊடாக (GTS) தலைமையகத்தில் அமைந்துள்ள தொலைதொடர்பாடல் பிரிவுக்கு உடனடியாக பரிமாற்றம் செய்யப்படுகின்றன. மேலும் கொழும்பு தேசிய வளிமண்டலவியல் நிலையம் மற்றும் விமான நிலைய வளிமண்டலவியல் நிலையங்கள் ஆகியனவும் இத் தரவுகளை அவர்களது வானிலை பகுப்பாய்வுக்கு உபயோகிக்கின்றன.

2015 ஆம் ஆண்டில் மழை வீழ்ச்சி, அமுக்கம், வெப்பநிலை, ஈரத்தன்மை, வளி, காண்புநிலை, காலநிலை மற்றும் முகில் வகைகள்/அளவுகள் உள்ளிட்ட மொத்தம் 60,813 மேற்பரப்பு வளிமண்டலவியல் அவதானிப்புகள் வளிமண்டலவியல் திணைக்களத்தின் மேற்பரப்பு வளிமண்டலவியல் விலைப்பின்னல் நிலையங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கு மேலதிகமாக பிரதான வானிலை அளவுருக்களை பதிவு செய்யும் முகமாக சுயமாக தரவுகளை பதிவு செய்யும் உபகரணங்களும் வளிமண்டலவியல் நிலையங்களில் உபயோகிக்கப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டில் உபயோகிக்கப்பட்ட மழை பதிகருவி (மழைவீழ்ச்சி), வெங்கதிரியக்கப் பதிகருவி, ஈரப்பதன் பதிகருவி (ஈரம்) அமுக்க வரைவி, சூரிய ஒளி அட்டைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை முறையே 7090, 7339, 6982, 983, 3121 மற்றும்175 ஆகும்.

2.1.1.1.2 மழைவீழ்ச்சி தரவுகள்

மழைவீழ்ச்சி தரவுகளை அவதானிக்கும் நோக்கில் நாடு தழுவியவாறு ஸ்தாபிக்கப்பட்ட மழைமானி நிலையங்களின் வலைபின்னலானது 487 மழைமானி நிலையங்களை உள்ளடக்குகின்றது. இவற்றில் 410 இற்கும் மேற்பட்ட நிலையங்களில் இருந்து ஆண்டு முழுவதும் தரவுகள் பெறப்படுகின்றன. இந்த நிலையங்கள் அரசாங்கம், அரசு சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சுயேற்சை அவதானிப்பாளர்களின் ஒத்துழைப்புடன் பேணிச் செல்லப்படுகிறது. இந்த நிலையங்களில் மழைவீழ்ச்சியானது தினமும் 8.30 மணிக்கு அளக்கப்படுவதுடன் மாத இறுதியில் தினசரி மழைவீழ்ச்சி அறிக்கையானது திணைக்களத்தால் பெறப்படுகிறது. நாடலாவியவாறு தெரிவு செய்யப்பட்ட 215 நிலையங்களிலிருந்து தினசரி மழைவீழ்ச்சி தரவுகள் வானிலை எதிர்வுகூறல் நோக்கங்களுக்காக நாளாந்த அடிப்படையில் பெறப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டில் மழைமானி தரவுகளை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக மழைமானி பேணிச் செல்லப்படுகின்ற அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் 314 சுயேச்சை அவதானிப்பாளர்களை பயிற்சி செயலமர்வுகளின் மூலம் பயிற்றுவிக்கப்பட்டது.

2.1.1.1.3 வேளான்மை வளிமண்டலவியல் தகவல்கள்

திணைக்களத்தில் வளிமண்டலவியல் நிலைய வலைப்பின்னல் 39 நிலையங்களை கொண்டுள்ளதுடன், இந்த நிலையங்களில் பொதுவான காலநிலை தரவுகளுக்கு மேலதிகமாக இந்த நிலையங்கள் மூலம் வேளான்மையுடன் தொடர்புடைய பல்வேறு ஆழ அளவுகளில் மண்வெப்பநிலை, புல்தரை மீதான அவதானிக்கப்பட்ட ஆகக்குறைந்த வெப்பநிலை, ஆவியாதல் வீதம் மற்றும் சூரிய ஒளி மணித்தியாலங்களின் அளவு என்பனவும் அளக்கப்படுகின்றன. இந்த அவதானிப்புகள் இந்த நிலையங்களில் தினசரி மு.ப.8.30 மணிக்கும் பி.ப.3.30 மணிக்கும் மேற்கொள்ளப்படுகின்றன.

கொழும்பு அலுவலகத்தில் வேளான்மை வளிமண்டலவியல் பிரிவு ஊடாக பெற்றுக்கொள்கின்ற தரவுகளை தரக்கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு வழங்கியதன் மூலம் 2015 ஆம் ஆண்டில் ரூபா 542,000.00 திணைக்களத்திற்கு வருமானமாக சேகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பெற்றுக்கொள்கின்ற தரவுகள், ஏனைய வானிலை தரவுகளை பகுப்பாய்வு செய்து வரைப்படமாக்கப்பட்டு எதிர்காலத்தில் ஏற்படும் காலநிலை மாற்றங்கள் மற்றும் வேளான்மை் காலநிலை தகவல்களுடன் ''கமத்தொழில் தகவல் வெளியீடு'' 2015 ஆம் ஆண்டில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனை ஒவ்வொரு வாரமும் இணையதளம் ஊடாக விநியோகிக்கப்படும்.





2.1.1.2 மேற்பகுதி வளிமண்டலத்தின் அவதானிப்புகள்

வளிமண்டலத்தின் பல்வேறு உயரங்களில் காணப்படும் வளிமண்டலவியல் அளவுருக்களின் அவதானிப்பானது மேற்பகுதி வளிமண்டலத்தின் அவதானிப்புகள் என பெயரிடப்பட்டுள்ளது. ரேடியோ சொன்ட் உபகரண பயன்பாட்டுடன் பூமியின் மேற்பரப்பிலிருந்து 20.கி.மீ.உயரம் வரையிலான உயர அளவுகளில் கிரினிச் நேரத்தின் படி கொழும்பில் 0600 மணிக்கு, வாரத்தில் மூன்று முறை மேற்பரப்பு வளிமண்டல அவதானிப்புகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டில் ரேடியோ சொன்ட் உபகரணத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின் மொத்த எண்ணிக்கையானது 152 ஆகும். ரேடியோ சொன்ட் உபகரண அவதானிப்புகளுக்கு மேலதிகமாக மேற்பகுதி வளிமண்டல வளித் தகவல்கள் பைலட்பலூன் (ிடைழவ டயடடழழெ) மூலமும் அவதானிக்கப்படுகின்றன.

கொழும்புக்கு மேலதிகமாக மன்னார், அம்பாந்தோட்டை மற்றும் பொலன்னறுவை போன்ற நிலையங்களில் பைலட் அவதானிப்பு பலூன்கள் மூலம் வளி தொடர்பான விபரங்கள் அவதானிக்கப்படும். கொழும்பு மற்றும் மேற்படி நிலையங்களில் கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பலூன் அவதானிப்புகளின் எண்ணிக்கை முறையாக 874, 591, 618, 324 ஆகும்.

2.1.2. தரவு கட்டுப்பாடு மற்றும் ஆவணமயமாக்கல்

நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள வளிமண்டலவியல் நிலையங்கள், வேளான்மை நிலையங்கள் மற்றும் மழைமானி நிலையங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் தரவுகளானது கொழும்பு தலைமையகத்தில் தரக்கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்படுகின்றதுடன் அவற்றின் துல்லியத் தன்மையுடன் தொடர்புடைய சந்தேகம் ஏதும் இருப்பின் அவை மீள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு சுவடியாக்கம் செய்வதற்கு முன்னர் திருத்தப்படுகின்றன.

இத் தரவுகளின் மென்பிரதிகள் தயாரிப்பு மற்றும் அவற்றின் சுவடியாக்கம் என்பன ஊடைஅளழகவ மென் பொருள் உபயோகத்தின் ஊடாக வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகின்றன.

2.1.3 தரவு விநியோகம்

பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்வேறு கற்கைகளை மேற்கொள்கின்ற நபர்கள், நிறுவனங்கள் காப்புறுதி கம்பெனிகள், நிருமாணிப்பு கம்பெனிகள் கடந்த காலநிலை தகவல்களை கோருவதுடன், கோருகின்ற தகவல்களின் படி 01 நாள் முதல் 07 நாட்கள் என்ற காலவெல்லைக்குள் வழங்கப்படுகின்றன. அரச நிறுவனங்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வரையறுக்கப்பட்ட நிதி பெறுமானத்தை கொண்ட தரவுகளை இலவசமாக வழங்கப்படுவதுடன், அவை சான்றுப்படுத்திய மற்றும் சான்றுப்படுத்தாத தரவுகள் என்றும் வழங்கப்படுகின்றன.

2015 ஆம் ஆண்டில் விரிவான வானிலை தொடர்பான அறிக்கைகள் 134 ம், தரவு அறிக்கைகள் 982 ம், வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளன. மற்றும் 95 தரவு அறிக்கைகள் இலவசமாக வளங்கபட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டில் காலநிலை தொடர்பான தரவு அறிக்கைகள் மற்றும் தரவு அறிக்கைகள் என்பன விற்பனை செய்வதன் மூலம் ரூபா.770,548.50 வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு திணைக்களத்திற்கு முடிந்துள்ளது.

தரவு விநியோகம் மூலம் பெற்றுக்கொண்ட வருமானம் - 2015.01.01 – 2015.12.31

கிளை	தொகை(ரூபா)
வானிலை	180,745.00
தரவு	296,816.00
ரேடார்	57,454.00
கணினி	3,802,832.00
தேசிய காலநிலை நிலையம்	452,697.50

2.2 பொது மக்களுக்கு, பல்வேறு நிறுவனங்களுக்கு, பல்வேறு கைத்தொழில்களுடன் தொடர்புடைய சமூகங்களுக்கு மற்றும் உலக வானிலை அவதானிப்பு வலையமைப்புகளுக்கு தகவல்கள் வழங்குதல்

2.2.1 பொது மக்களுக்கு நாளாந்தம் வழங்கப்படும் தகவல்கள்

தேசிய வளிமண்டலவியல் நிலையமானது தீவின் வானிலை நிலைமை பற்றிய எதிர்வுகூறல்களை மு.ப. 5.30 மணிக்கு பி.ப .12.00 மணிக்கு மற்றும் பி.ப .4.00 மணிக்கு தினமும் வழங்குகின்றது. தீவின் கடற்கரை பிரதேசத்தில் 24 மணித்தியாலங்களுக்குள் நிகழக் கூடியதான மழை, காற்று, இடிமுழக்கம் தொடர்பான எதிர்வு கூறல்களை ஒவ்வொரு நாளும் பி.ப. 5.30 மணிக்கு மற்றும் பிறபகல் 12.00 மணிக்கு அச்சு ஊடகம், ஒலி மற்றும் ஒளி ஊடகங்களின் ஊடாக தேசிய வளிமண்டல நிலையம் வழங்குகின்றது.

ஆண்டு முழுவதும் வழங்கப்பட்டுள்ள நாளாந்த வானிலை எதிர்வுகூறல்களின் அளவு 1095 ஆகும். ஊடகங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் 3769 இற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளன. பலநாள் வள்ளங்களுக்காக வழங்கப்பட்ட எதிர்வுகூறல்களின் எண்ணிக்கை 365 ஆகும்.

தீவின் பிரதான பத்து நகரங்களுக்கான வானிலை நிலைமைகள் ஒவ்வொரு நாளும் பி.ப 4.00 மணிக்கு அச்சு ஊடகம், ஒலி மற்றும் ஒளி ஊடகங்களுக்கும், இணையத்தளத்திற்கும்ம் வழங்கப்படுவதுடன், ஆண்டு முழுவதும் 365 அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

2.2.2 உலகளாவிய அவதானிப்பு வலையமைப்புகளுக்கு வழங்கும் தகவல்கள்

தேசிய வளிமண்டலவியல் நிலையம் அமைந்துள்ள, வளிமண்டலவியல் தொடர்பாடல் நிலையத்தின் ஊடாக ஒவ்வொரு 03 மணித்தியாலங்களுக்கொருமுறை பிரதேச நிலையங்களிலிருந்து தரவுகளை பெற்றுக்கொண்டு, அவற்றை உடனடியாக பிராந்திய மற்றும் உலகளாவிய வளிமண்டலவியல் தொலைதொடர்பாடல் மையத்தின் ஊடாக புதுடில்லியல் அமைந்துள்ள பிராந்திய நிலையத்திற்கு பரிமாற்றப்படுகின்றன. இந்த செயற்பாடு தடங்கலின்றி தொடர்ச்சியாக கடந்த ஆண்டு முழுவதும் நிறைவேற்றப்பட்டது.

2.2.3 பல்வேறு நிறுவனங்களுக்கு, பல்வேறு தொழில்களுடன் இணைந்துள்ள சமூகங்களுக்கு தகவல் வழங்குதல்

அதற்கு மேலதிகமாக பின்வரும் விசாரணைகளுக்கு 2015 ஆம் ஆண்டில் தேசிய வளிமண்டலவியல் நிலையத்தின் மூலம் எண்ணியல் ஆய்வுகள்,
பொலிஸ், ஹோட்டல், வர்த்தக நிறுவனங்கள் மூலம் மேற்கொண்ட விசாரணைகள், கடற்றொழில் சமூகத்திடமிருந்து கிடைத்த விசாரணைகள், ஊடகங்கள் மற்றும் நேர்காணல்களினால் சான்றுப்படுத்திய காலநிலை அறிக்கைகள்.

2.3 விமானப்போக்குவரத்து வளிமண்டவியல் தகவல்களை விமானச் சேவைகளிடம் வழங்குதல் மற்றும் கடற்படை செயற்பாடுகளின் பொருட்டு சேவை வழங்குதல்

2.3.1 விமானப் போக்குவரத்துக்கான வளிமண்டலவியல் சேவைகளை வழங்கதல்

விமானப் போக்குவரத்து இயக்கச்செயற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் பாதுகாப்பு, ஒழுங்கு முறைமை ஆகியவற்றின் மீது வானிலையானது தாக்கத்தை செலுத்தலாம். எனவே வளிமண்டலவியல் திணைக்களத்தின் மூலம் கட்டுநாயக்கா, மத்தளை மற்றும் இரத்மலானை விமான நிலையங்களின் வலாகங்களில் வளிமண்டலவியல் அலுவலகங்களை பேணுவதுடன், விமான இயக்கச் செயற்பாடுகளுக்கு தாக்கங்களை ஏற்படுத்தம் வானிலை நிலைமைகள் தொடர்பாக அவதானிப்புகள் மேற்கொள்ளப்படும்.

2.3.1.1 கட்டுநாயக்கா விமான நிலையம்

கொழும்பு விமான தகவல் வலயம் (Colombo FIR) ஊடாக போக்குவரத்துச் செய்யும் மற்றும் கட்டுநாயக்கா விமான நிலையத்தை பயன்படுத்துகின்ற விமானங்களின் பொருட்டு கட்டுநாயக்கா விமான நிலையத்தின் வளிமண்டலவியல் அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ள சென்றடையும் விமான நிலைய எதிர்வுகூறல்கள் (TAF) அறிக்கைகளின் எண்ணிக்கை 1460 ம், ½ மணித்தியாலங்களுக்கொரு முறை மேற்கொள்கின்ற அவதானிப்பு (METAR) அறிக்கைகளின் எண்ணிக்கை 8760 ம், விமான நிலைய எச்சரிக்கைகள் தொடர்பான (SIGMET) அறிக்கைகளின் எண்ணிக்கை 122 ம், விமான நிலைய எச்சரிக்கைகளின் (Aerodrome Warnings) எண்ணிக்கை 72 ம் ஆகும். வானிலை தகவல்கள் அடங்கிய கடிதக்கோவைகளின் எண்ணிக்கை 26676 ஆகும். உள்நாட்டு விமான போக்குவரத்திற்கான பிராந்திய எதிவுகூறல்கள் 5883 ஆகும். செல்வழி எதிர்வு கூறல்கள் 4622 ஆகும்.

2.3.1.2 மத்தளை சர்வதேச விமான நிலையம்

மத்தளை சர்வதேச விமான நிலையம் அதன் வளிமண்டலவியல் அலுவலகத்தால் 2015 ஆம் ஆண்டில் வழங்கிய தகவல்கள் பின்வருமாறாகும். .

சென்றடையும் விமான நிலைய எதிர்வுகூறல் (TAF) செய்திகள் 1460,

½ மணித்தியாலத்திற்கொருமுறை மேற்கொள்கின்ற அவதானிப்புகள் (METAR) - 8760,

விசேட அவதானிப்புகள் (SPECI)- 300

2.3.1.3 இரத்மலானை விமான நிலையம்

இந்த விமான நிலையம் மூலம் உள்ளூர் விமான இயக்கச் செயற்பாடுகளின் பொருட்டு தேவைப்படும் வானிலை தகவல்களை வழங்குதல் மற்றும் நாளாந்தம் தேவைப்படும் வளிமண்டலவியல் அவதானிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றது. 2015ம் ஆண்டு வழங்கப்பட்ட தரவுகள் பின்வருமாறு.

½ மணித்தியாலத்திற்கொருமுறை மேற்கொள்கின்ற அவதானிப்புகள் (METAR)– 5110,

விசேட அவதானிப்புகள் SPECI – 483,

மேற்பரப்பு அமுக்க ஏற்பாடுகள; (QNH)=146

2.3.2 கடல்சார் செயற்பாடுகளுக்கு வளிமண்டலவியல் சேவைகளை வழங்குதல்

2.3.2.1 கடல்சார் நடவடிக்கைகளின் பொருட்டு தீவை சுற்றியுள்ள கடல் பிரதேசத்தின் வானிலை அறிக்கை (Shipping Report)

ஒவ்வொரு நாளும் மு.ப. 10.00 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்கும் தீவை சுற்றியுள்ள கடல் பிரதேசத்தின் வானிலை தகவல்கள் வழங்கப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள கடல் பிரதேசத்தின் வானிலை அறிக்கைகளின் எண்ணிக்கை 730 ஆகும்.

2.3.2.2 சர்வதேச கடல் பிரதேசத்தின் வானிலை அறிக்கை (Fleet Forecast)

இந்த அறிக்கைகள் ஒவ்வொரு நாளும் மு.ப. 6.00 மணிக்கும் பி.ப. 4.30 மணிக்கும் பின்வரும் உருவ படத்தில் காட்டப்பட்டுள்ள சர்வதேச கடல் பிரதேசத்தின் வானிலை, காற்றின் நிலைமைகள் மற்றும் கடல்சூழல் ஆகியன தொடர்பாக தகவல்களையும் எதிர்வுகூறல்களையும் உள்ளடக்குகின்றன. கடந்த ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளின் எண்ணிக்கை 730 ஆகும்.



2.4 சுனாமி மற்றும் மோசமான காலநிலை நிலைமைகள் தொடர்பாக முன்னெச்சரிக்கை தகவல்கள் மற்றும் ஆலோசனை வழங்குதல்

2.4.1 சுனாமி முன்னெச்சரிக்கை

இலங்கை சாரந்துள்ள பிரதேசங்களில் சுனாமி முன்னெச்சரிக்கைகள் மற்றும் நில அதிர்வு தொடர்பாக எப்போதும் அவதானத்துடன் உள்ள, கலிபோனியா இணைந்த நில அதிர்வு வலையமைப்பு (CISN), பசுபிக் சுனாமி முன்னெச்சரிக்கை நிலையம் (PTWC), ஜப்பான் வளிமண்டலவியல் முகவர் நிறுவனம் (JMA), சுனாமி தகவல்கள் வழங்கும் பிராந்திய சேவை நிலையம், (RTSP) மற்றும் புதுடில்லி பிராந்திய அலுவலகம் போன்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், பொதுமக்களுக்கும் நிறுவனங்களுக்கும் சுனாமி முன்னெச்சரிக்கை வழங்கப்படுகின்றது. கடந்த ஆண்டில் சுனாமி முன்னெச்சரிக்கை நிலைமைகள் ஏற்படவில்லை.

2.4.2 மோசமான காலநிலை நிலைமைகள் தொடர்பான அறிவிப்புகள்.

கடும் மழை நிலைமைகள், இடி முழக்கம், கடுங் காற்று, சூறாவளி மற்றும் டொர்னாடோ போன்ற வானிலை நிலைமைகள் ஏற்படுமென தோன்றுகின்ற சந்தர்ப்பங்களில் அச்சு ஒலி மற்றும் ஒளி ஊடகங்களிடம் உடனடியாக அறிவிக்கப்படுவதுடன், தாக்கங்கள் ஏற்படும் பிரதேசங்களில் மாவட்ட செயலாளர்கள், இடர் முகாமைத்துவ நிலையங்கள், முப்படை, பொலிஸ் சமிஞ்சை பிரிவுகள், சனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம், மீன்பிடி அமைச்சு, கலம்பு ரேடியோ ஊடாக கடற்படையிடம், தேசிய நீர் வழங்கல் ஆராய்ச்சி நிறுவனம், மாஸ்டர் டயிவர்ஸ் கரையோரப் பாதுகாப்பு பிரிவு மற்றும் வெளியக வானிலை அலுவலகங்கள் போன்ற எல்லா நிறுவனங்களிடம் அல்லது நிலைமையின் படி தேவையான நிறுவனங்களிடம் பெக்ஸ் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டில் மோசமான காலநிலை காரணமாக 38 அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2.5 பொது மக்களை விழிப்புணர்வூட்டல்

2.5.1 பொது மக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள்

விசேடமாக வளிமண்டலவியல் ஆபத்துக்கள் பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் திணைக்களத்தின் பதவியினரால் நடாத்தப்படுகின்றது.

2.5.1.1 பிரதான அலுவலகத்திற்கு பார்வையிடுவதற்கு வருபவர்கள்

பாடசாலை மாணவர்கள், உயர்கல்வி நிலையங்களில் மாணவர்கள் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளின் அலுவலர்கள் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு தினம்தோறும் பிரதான அலுவலகத்திற்கு விஜயம் செய்கின்றனர்.

வளிமண்டலவியல், வளிமண்டலவியல் ஆபத்துக்கள் மற்றும் வானிலை பற்றிய விரிவுரைகளை நடாத்தியும், அவதானிப்புகளை பெற்றுக்கொள்ளும் முறை தொடர்பாக அனுபவங்களை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு வழங்குவதன் மூலமும் அவர்களை அறிவுறுத்தப்படும். திணைக்களத்தில் நடைபெற்ற அறிவுறுத்தும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய பாடசாலை பிள்ளைகள் அடங்கிய குழுக்கள் மற்றும் ஏனைய குழுக்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

பாடசாலை பிள்ளைகள் அடங்கிய குழுக்களின் எண்ணிக்கை 300

மாணவர்கள்

31767

உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை 09

மாணவர்கள்

802

பாதுகாப்பு பிரிவுகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 729

ஏனையவர்கள் 924

2.5.1.2 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

வானிலை, வளிமண்டலவியல் ஆபத்துக்கள் மற்றும் முன்னாயத்தம் தொடர்பாக அறிவுறுத்தும் நிகழச்சிகள், மாவட்ட செயலக மட்டத்தில் ஒழுங்கமைக்கப்பட்டன. ஆண்டில் நடாத்தப்பட்ட அறிவுறுத்தும் நிகழ்ச்சிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

நடாத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள்

மாவட்டம்	நடாத்தப்பட்ட இடங்கள்
குருணாகல்	மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலர்கள் / விவசாயம் புரிபவர்கள் - பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை 427
அநுராதபுரம்	மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலர்கள் / விவசாயம் புரிபவர்கள் - பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை 200
பொலன்னறுவை	மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலர்கள் / விவசாயம் புரிபவர்கள் - பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை 250 மாவட்ட செயலகம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் அலுவலர்கள் , பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை 300
கேகாலை	மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலர்கள் / விவசாயம் புரிபவர்கள் - பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை 420 மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் அலுவலர்கள் - 100 பாடசாலை மாணவர்கள் -200
மாத்தளை	மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலர்கள் / விவசாயம் புரிபவர்கள் - பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை500
காலி	மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலர்கள் / விவசாயம் புரிபவர்கள் - பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை 300

இதற்கு மேலதிகமாக மருதானை, மிரிஹான, காலி பொலிஸ் பயிற்சி கல்லூரிகளின் 500 அலுவலர்களுக்கு வானிலை, வளிமண்டலவியல் ஆபத்துக்கள் மற்றும் முன்னாயத்தம் தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

2.5.1.3 நடாத்தப்பட்ட மாநாடுகள்/பயிற்சி பட்டறைகள்

2.5.1.3.1 உலக வளிமண்டலவியல் தினம்

"காலநிலை வானிலை, மற்றும் தாருண்ணியம்" எனும் தொணிப்பொருளில் அறிவுறுத்தும் நிகழ்ச்சியின் கீழ் அநேகமானோர் பங்குபற்றிய பயிற்சி பட்டறையுடன், உலக வளிமண்டவியல் தினம் 2015 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆந் திகதி வெகுவிமரிசியாக கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பொருட்டு பாடசாலை மாணவர்கள், அலுவலர்கள், நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்பு அலுவலர்கள் பங்குபற்றினார்கள்.

2.5.1.3.2 பருவகாலக் கருத்தரங்கு

பருவக்கால காலநிலையில் ஏற்படக் கூடிய சுற்றாடல் நிலைமைகள் தொடர்பாக தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவக்காற்று ஆரம்பிப்பதற்கு இரண்டு வாரத்திற்கு முன்னர் குறித்த நிலைமைகளை கருத்தில் கொண்டு, நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிறுவனங்களை அழைத்து தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்படும். இதன்போது கணிதத்துடன் தொடர்புடைய படிவங்களின் பெறுபேறுகள் மற்றும் ஏனைய தகவல்களை சார்ந்து, எதிர்வரும் பருவக்காலத்தில் ஏற்படக் கூடிய வானிலை நிலைமைகளுக்கு தயாராகும் பொருட்டு அந்த நிறுவனங்களிடம் பருவக்காலம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட எதிர்வுகூறலை வழங்கி கலந்துரையாடப்படும்.

2.5.2 வளிமண்டலவியல் கருவிகளும் உபகரணங்களும்

வளிமண்டலவியல் அலகுகளை தாபித்தலும் தரவுகளை சேகரித்தலும் தொடர்பான ஆலோசனை வழங்குதல் மற்றும் பயிற்றுவித்தல், பல்வேறு நிறுவனங்களால் வளிமண்டலவியல் உபகரணங்களை கொள்வனவு செய்யும்போது தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கல் மேற்கொள்ளப்பட்டன. மழைமானி நிலையங்கள் மற்றும் வேளான்மை வளிமண்டலவியல் நிலையங்கள் ஆகியவற்றுக்கு அவசியமான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

2.5.2.1. உபகரணப்பிரிவு

11 வளிமண்டலவியல் நிலையங்களில் வளிமண்டலவியல் உபகரணங்கள் பழுதுபார்க்கப்பட்டன. வான்படைக்குரிய 9 காற்றழுத்தமானிகள் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. 16 பாடசாலைகளுக்கு உபரணங்கள் வழங்கி அது தொடர்பாக பாடசாலை மாணவர் குழுக்களை அறிவுறுத்தப்பட்டது.

2.5.2.2. இலத்திரனியல் பொறியியல் பிரிவு

இலத்திரனியல் பொறியியல் பிரிவின் பிரதான பணி யாதெனில், மின் மற்றும் இலத்திரனியல் வளிமண்டலவியல் உபகரணங்களை பழுதுபார்ப்பதும் உரியவாறு பேணுவதுமாகும். அதற்கு மேலதிகமாக AWS முறைமை மற்றும் தானியங்கிவானிலை முறைமையின் பழுதுபார்த்தல் மற்றும் உரியவாறு பேணுதல் கடந்த ஆண்டில் மிக நன்றாக மேற்கொள்ளப்பட்டது.

2.6 ஆராய்ச்சிகள்

2015 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் மூலம் பின் வரும் ஆய்வுகள் மெற்கொள்ளப்பட்டன.

1. பருவக்கால வானிலையுடன் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு தொடர்பான அவதானிப்பு
2. இலங்கையில் மற்றும் இந்தியாவில் பருவக்கால வானிலை பிரதேசங்களில் மேகக்கதிர் இயக்கத்தாக்கம் பற்றிய ஒப்பீட்டு ஆய்வு
3. லா நினா முறைமை இலங்கை மழைவீழ்ச்சியின் மீது ஏற்படுத்தும் தாக்கம்
4. பொது மக்களை அடிப்படையாகக்கொண்ட இடிமுழக்க அபாய வலயங்களை அடையாளம்காணல் மற்றும் படவரைவு
5. நிலையான மழை வீழ்ச்சி சுட்டென் பயன்பாட்டின் மூலம் இலங்கையில் வறட்சி நிலைமைகள் தொடர்பான கற்கை
6. இலங்கையில் தெற்கு மற்றும் மேற்கு கடற்கரையை அணுகிய திடீர் புயல் பற்றிய உருவகப்படுத்தல்
7. வரை ஏற்பட்ட கடும் மழை தொடர்பான 28-19 திசெம்பர் 2014 WKF உருவகப்படுத்தல்
8. ஆண்டில் தென் மேற்கு பருவக்காற்று 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட எல் நினோ தாக்கம்
9. திகதியில் ஏற்பட்ட கடும் மழை தொடர்பாக 1 யூன் 2014 பகுப்பாய்வு
10. நீண்ட கால எதிர்வுகூறல்களின் பொருட்டு பொருத்தமான சுட்டிகளை கண்டறிதல்

2.7 வரையறுக்கப்பட்ட வானியல் சார்ந்த சேவைகளை வழங்குதல்

சூரிய உதயம், சூரியன் மறைதல் மற்றும் சந்திரன் பிரகாசிக்கும் வேளை, கோள்கள் கண்களுக்கு புலப்படும் தன்மை, புதிய சந்திரனின் தோற்றம், சந்தரனின் வளர்பிறை போன்றன கணிப்பிடப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றது. திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரின் சேவைகள் போயா மற்றும் அரசாங்க விடுமுறை தின குழுவிற்கு வழங்கப்படுகின்றன.

2.8 திணைக்களத்தின் அபிவிருத்திப் பணிகள்

2.8.1 நிலையான இயக்கச் செயற்பாடு

அபாய சூழ்நிலைகளின்போது SOP மிகவும் முக்கியமாகும். அதன் காரணமாக மோசமான வானிலையின்போது தகவல்களை பரிமாற்றும் வேளையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினது கடமைப்பொறுப்புகள் மற்றும் தொடர்பாடல் மேற்கொள்ள வேண்டிய முறை தொடர்பாக எல்லா நிறுவனங்களிடமும் இணக்கம் ஏற்பட்டன. அதற்கிணங்க திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்ட விபரங்களில் உபயோகப்படுத்தும் தொழில்நுட்ப சொற்களின் நடைமுறை விளக்கம் பற்றிய நியமங்களும் நிலையான இயக்கச் செயற்பாடுகளும் வகுக்கப்பட்டன.(Standard Operation Procedure)

2.8.2 நடாத்தப்பட்ட பயிற்சி/கருத்தரங்குகள்

கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையின் ஊடாக கொரியா குடியரசின் அனுசரணையுடன் ''வளிமண்டலவியல் சேவைகளுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்'' பற்றிய பயிற்சி செயலமர்வு வளிமண்டலவியல் திணைக்களத்தின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்டதுடன், பிராந்திய நாடுகளின் பங்களிப்புடன் நவம்பர் மாதம் 08-16 வரை கொழும்பில் நடாத்தப்பட்டது.

2.9 பங்குபற்றிய கூட்டங்கள்/பயிற்சிகள்/கருத்தரங்குகள்/செயலமர்வுகள்

2.9.1 வெளிநாட்டு விஜயங்கள் கூட்டங்கள்/பயிற்சிகள்/கருத்தரங்குகள்/செயலமர்வுகள்

2015 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் பதவியினர் 40 பேர் கூட்டங்கள்/பயிற்சிகள்/கருத்தரங்குகள்/செயலமர்வுகள் என்பவற்றின் பொருட்டு வெளிநாட்டு விஜயங்கள் மேற்கொண்டுள்ளனர்.(இணைப்பு 01)

தொடர் இலக்கம்	அலுவலரின் பெயர்	புலமைப்பரிசில் பெயர்	நாடு	காலவெல்லை
01	திரு.எல் சந்திரபால	IPCC 41 ஆவது அமர்வு	கென்யா	2015 பெப்ரவரி 24-27
		தெற்காசியா வறட்சி அவதானிப்பு முறைமை, வானிலை மற்றும் நீர் நுகர்வோரின் அமர்வு	பங்கலாதேஷ்	2015 ஏப்பிரல் 20- 23
02	திரு.டி.ஜே.ஏ.வீரவர்தன	ESCAP/WMO PTC இல் **42** ஆவது அமர்வு மற்றும் அயனமண்டல சூறாவளி தொடர்பான **47** ஆவது அமர்வு	தாயிலாந்து	2015 பெப்ரவரி 9-13
		வானிலை சேவையில் சிரேஷ்ட அலுவலர்களின் சீன கற்கை கூற்றுலா	சீனா	2015 ஒக்டோபர் 11-22
03	திரு.எஸ்.ஆர் ஜயசேகர	RIMES இல் **7** ஆவது கவுன்சில் கூட்டம் மற்றும் அமைச்சர்களின் 2 ஆவது கருத்தரங்கு	இந்தியா	2015 யூலை 9-11
		ஆசியா மற்றும் கடல் சார் பிராந்தியங்களில் தேசிய வானிலை மற்றும் நீர் சேவைகளின் பொருட்டு செயற்கைக் கோள் தரவு பயன்பாடு தொடர்பான பயிற்சி மற்றும் “RA II WIGOS” கருத்திட்டத்தின் கூட்டிணைப்பு சபையின் கூட்டங்கள்	ஜப்பான் (by JMA)	2015 நவம்பர் 9-14
		INDARE நடாத்தும்		2015 ஒக்டோபர்

04	திரு.எம்.டீ.தயாநந்த	இரண்டாவது குழு கூட்டம்	முருசிய	19- 20
		ESCAP/WMO டைபூன் கலந்துரையாடல் மாநாடு	லாகோஸ்	2015 நவம்பர் 4 - 6
05	திரு.கே.எச்.எம்.எஸ் பிரேமலால்	கடும் வானிலை எதிர்வுகூறல் காட்சி கருத்திட்டம் - கடும் வானிலை எதிர்வுகூறல் மற்றும் ஆபத்துக்கல் பற்றிய சேவைகளுக்கான பயிற்சி	தயரிலாந்து	2015 செப்தெம்பர் 14 - 25
06	திரு.ஏ.கே.கருணாநாயக்கா.	SASCOF 6 ஆவது அமர்வு மற்றும் தெற்காசிய நீர் பிரிவிற்கான அமர்வு	பங்களாதேஷ்	2015 ஏப்பிரல் 19 - 23
07	டீ.ஏ.ஜயசிங்க ஆரச்சி	இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பருவகால எதிர்வுகூறல் நகர்வு முறைமை தொடர்பான பயிற்சி	தாயிலாந்து பங்கொக் (By RIMES)	2015 ஆகஸ்ட் 24 - செப்தெம்பர் 05
08	திருமதி ஏ.ஆர்.வர்ணசூரிய	இலக்கு பயிற்சி செயற்பாடு (ICTP - MOES-IITM பூனெய்)	பூனெய், இந்திய	2015 பெப்ரவரி 09 - 20
		வளிமண்டலவியல் சேவைகளின் பொருட்டு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி	கொரியா (KOICA)	2015 ஒக்டோபர்18 நவம்பர் 07
09	திரு.ஏ.எல.கே.விஜேமான்னகே	‘ஆசிய பசுபிக் நாடுகளில் வளிமண்டலவியல் அலுவலர்களின் முகாமைத்துவம் தொடர்பான மாநாடு	நங்ஜிங் சீனா	2015 யூன் 11 - யூலை 01
		வளிமண்டலவியல் சேவைகளின் தரவு சுவடியாக்கம் தொடர்பான	தன்சானியா	2015 நவம்பர் 9-14

		அறிவை மேம்படுத்தல்		
10	செல்வி அய்.எம்.எஸ்.பீ.ஸஜயவர்தன	Win SASCOF -முதலாவது கூட்டம்	இந்தியா	2015 ஒக்டோபர்14 -15
11	திரு.கே.டீ.சுஜிவ	கடும் வானிலை அபாயங்கள் தொடர்பான எதிர்வுகூறல் காட்சிப்படுத்தல் கருத்திட்டம் - கடும் வானிலை அபாயங்கள் தொடர்பான எதிர்வுகூறல், முன்னெச்சரிக்கை தொடர்பான சேவைகளுக்கான பயிற்சி, பொதுமக்களுக்கான வானிலை பயிற்சி	தாயிலாந்து	2015 செப்தெம்பர் 14 - 25
12	திரு.டீ.ஜீ.பிரணாந்து	அயனமண்டல சூறாவளி தொடர்பாக பற்றிய சர்வதேச பயிற்சி செயலமர்வு	இந்தியா	2015 ஆகஸ்ட் 3- 14
13	திரு.ரீ.எம்.என்.பீரீஸ்	கடும் மழை தொடர்பான WM/WWRP மூன்றாவது செயலமர்வு	இந்தியா	2015 செப்தெம்ர் 22 – 24
14	திரு.எம்.எம்.பீ.மெண்டிஸ்	அயனமண்டல சூறாவளி தொடர்பாக எதிர்வுகூறல் பற்றிய சர்வதேச பயிற்சி செயலமர்வு SMRC, புதுடில்லி	இந்தியா	2015 ஆகஸ்ட் 03- 14
18	திரு.பீ.எச்.த.சில்வா	வளிமண்டவியல் சேவைகளை பலப்படுத்தல்/ மீள்ஸ்தாபித்தல்	ஜப்பான்	2015 செப்.15- திசெம்பர்.13
19	திரு.ஜே.டப்ளியூ. கருணாரத்ன	வளிமண்டலவியல் தொடர்பான பட்டநிலைபின்படிப்பு பட்டம் - பிலிபைன்ஸ்	பிலிபைன்ஸ்	2015-2017 ஜனவரி 08

20	திரு.ஏ.சீ.எம் ரௌதிரிகு	வளிமண்டவியல் சேவைகளின் பொருட்டு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் மாதத்திற்கான எதிர்வுகூறல் தொடர்பான பயிற்சி மாநாடு-டோக்கியோ வானிலை நிலையம்	கொரியா ஜப்பான்	2015 ஒக்.18 - நவ. 07 2015 நவ.16-20
21	திரு.பீ.கருணாபால	வளிமண்டலவியல் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு பட்டம் வளிமண்டலவியல் சேவைகள் தொடர்பான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்	சீனா கொரியா	2015-2017 செப் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 2015 ஒக்.18 - நவம்பர் 07
22	திரு நுவன் குமாரசிங்க	இடர்களை குறைக்கும் மற்றும் மீள்நிலைப்படுத்துவதற்கான உலகளாவிய வசதிகளை அளிக்கும் அனுசரணை முகவர் நிகழ்ச்சித்திட்டம் - Inter MET Asia 2015 டொப்லர் ரேடார் முறைமை ஸ்தாபிக்கும் பொறுப்பாளர் நிதியத்தின் கருத்திட்டம் தொடர்பான நிபுணர்களின்	சிங்கப்பூர் சுவிட்சர்லாந்து	2015 ஏப்பிரல் 22-24 2015 யூன்01 - 03

		கூட்டம் இடிமுழக்க அபாயங்களை குறைப்பதற்கான உபாய முறையிலான தலையிடுதல்களுக்கான சர்வதேச கருத்தரங்கு	சிம்பாபே	2015 நவ.11-13
23	திரு.கலும் பிரியதர்ஸன	காலநிலை ரேடார் செயற்பாடு மற்றும் தரவு பயன்பாடு தொடர்பான சர்வதேச பயிற்சி பாடநெறி	கொரியா	2015 மே 10-23
24	திரு.எச்.ஏ.ஜீ.தர்மபிரிய.	ஆசியா - பசுபிக் நாடுகளின் வளிமண்டலவியல் அலுவலர்களின் முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு	நங்ஜிங் சீனா	2015 யூன் 11, யூலை 01
25	திரு.மலித் பிரனாந்து	வளிமண்டலவியல் சேவைகளுக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்	கொரியா (KOICA)	2015 ஒக்.18- நவ.07
26	திருமதி.டி.டப்ளியு.பீ.டீ.தர்ஷிகா	உலகளாவிய வெப்பம் தொடர்பாக முந்திட்டம் தகவல் தொடர்பான TCC பயிற்சி	ஜப்பான்	2015சனவரி 26-30
27	திரு.எச்.எம்.ஆர்.சீ.ஹேரத்	வலயங்களில் மோசமான வானிலை தன்மையை குறைக்கப்படுதல் தொடர்பாக ஆராய்ச்சி பயிற்சி(ORDEX)	சீனா	2015 நவம்பர் 23-26
28	திரு.ரீ.பி.மஹீபால.	ஆசியா பசுபிக் நாடுகளில் வளிமண்டலவியல்	நங்ஜிங்	2015 யூன் 11, யூலை

		அலுவலர்களின் முகாமைத்துவம் தொடர்பான மாநாடு	சீனா	01
29	திரு.எஸ்.கே.ஜே.சமரசூரிய	ஆசியா - பசுபிக் நாடுகளின் வளிமண்டலவியல் அலுவலர்களின் முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு	நங்ஜிங்	2015 யூன் 11, யூலை 01
30	திரு. அய்.எஸ்.எம்.அபேசிங்க	ஆசியா - பசுபிக் நாடுகளின் வளிமண்டலவியல் அலுவலர்களின் முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு	நங்ஜிங் சீனா	2015 யூன் 11 - யூலை 01
31	ஏ.அய்.சமரசேகர	ஆரம்ப வளிமண்டலவியல் தொடர்பான பாடநெறி	கரச்சி, பாகிஸ்தான்	2015 யூன் 12 ஒக்16
32	திரு.எம்.எல்.ஆர் செனெவிரத்ன	ஆரம்ப வளிமண்டலவியல் தொடர்பான பாடநெறி	கரச்சி, பாகிஸ்தான்	2015 யூன் 12 ஒக்.16
33	திரு.பி.ஜி.செனெவிரத்ன	ஆரம்ப வளிமண்டலவியல் தொடர்பான பாடநெறி	கரச்சி, பாகிஸ்தான்	2015 யூன் 12 ஒக்.16
34	பீ.ஜீ.அசோக பிரேமரத்ன	துறைமுகம் சார்ந்த வளிமண்டலவியல் அலுவலர்களுக்கான சர்வதேச செயலமர்வு	சிலி	2015 யூலை 2 -24
35	திரு.ஜீ.எஸ்.விஜேநாயக்கா	காலநிலை இடர் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான வானிலை தகவல் சேவைகளுக்கான மாநாடு	சீனா (CMA)	2015செம்தெம்பர்10-30
36	திருமதி.ஈ.எஸ்.பிரியதர்ஷனி	வானிலை இடர் முகாமைத்துவம் மற்றும்	சீனா (CMA)	2015 செப்தெம்பர் 10- 30

		அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான வானிலை தகவல் சேவைகளுக்கான மாநாடு		
37	திரு.எச்.எம்.எஸ்பீ.ஹேரத்	வானிலை இடர் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான வானிலை தகவல் சேவைகளுக்கான மாநாடு	சீனா **(**CMA)	2015 செப்தெம்பர் 10- 30
38	திரு.எஸ்.வசந்தகுமார	வானிலை இடர் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான வானிலை தகவல் சேவைகளுக்கான மாநாடு	சீனா **(**CMA)	20152015செப்தெம்பர் 10- 30
39	திரு.யு.ஜீ.ஏக்கநாயக்கா	வானிலை இடர் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான வானிலை தகவல் சேவைகளுக்கான மாநாடு	சீனா **(**CMA)	2015 செப்தெம்பர் **30**
40	திரு.ஈ.ஏ.அய்.பி.ஏக்கநாயக்கா	சுயு ஐஐ நாடுகளின் உபகரணங்களை பேணுதல் மற்றும் அளவீடுகள் தொடர்பான பயிற்சி	நங்ஜிங் - சீனா	2015நவம்பர்**2 - 27**

2.9.2 உள்நாட்டு பயிற்சிகள்

ஆண்டில் திணைக்களத்தைச் சேர்ந்த 48 பணியாட்கள் பல்வேறு நிறுவனங்களில்/முகவராண்மைகளில் பயிற்சிகள் பெற்றனர். மேலும் திணைக்களத்து பதவியணியில் இலங்கை தொழில்நுடப்வியல் சேவை உத்தியோகத்தர்கள் 78 பேர்களின் பங்களிப்புடன் தொடர்ச்சியான கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சி (CET) நடாத்தப்பட்டது. மேலும் வளிமண்டலவியலாளர் 8 பேர்களும், ஆராய்ச்சி உதவியாளர்கள் 5 பேர்களும் பயிற்சி பாடநெறியில் பங்குபற்றச் செய்விக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியான கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

தொடர்ச்சியான கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டில் பின்வரும் 4 நிகழ்ச்சித்திட்டங்கள் வளிமண்டலவியல் அலுவலர்களின் பொருட்டு நடாத்தப்பட்டன.

1. எண்ணியல் வளிமண்டலவியல் எதிர்வுகூறலுக்கான அடிப்படை கற்கைநெறி
2. வானிலை தரவு பகுப்பாய்வு
3. வளிமண்டலவியல் உபகரணங்கள் தொடர்பான பயிற்சி கற்கைநெறி
4. வளிமண்டலவியல் பாடநெறி தொடர்பான உயர் கற்கைநெறி

இங்கு வளிமண்டலவியல் தொடர்பான உயர் கற்கை நெறியின் பொருட்டு வளிமண்டலவியல் அலுவலர்களுக்கு மேலதிகமாக வளிமண்டலவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்கள் பங்குபற்றினார்கள். இதன் படி இந்த 04 நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு பயிற்றுவிக்கப்பட்ட அலுவலர்கள் பின்வருமாறாகும்.



இந்த தொடர்ச்சியான கல்வி மற்றும் பயிற்சி நிகழ்சித்திட்டத்தின் கீழ் விசேட 03 பாடநெறிகள் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன், ஒரு நிகழ்ச்சியின் பொருட்டு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதி உதவி கிடைக்கப்பெற்றன. அதன் படி

1. தரவுகளின் குறையின்மையுடன் எண்ணியல் வளிமண்டலவியல் எதிர்வுகூறல்.
2. நீண்டகால எதிர்வுகூறல்
3. வானிலை எதிர்வுகூறல்

இங்கு முதலாவது நிகழ்ச்சியின் பொருட்டு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்பட்டதுடன், பங்களாதேஷ் சார்க் வானிலை ஆராய்ச்சி நிலையத்தின் 02 வளப்பகிர்வாளர்கள் பங்குபற்றினர். இந்த நிகழ்ச்சியின் பொருட்டு பின்வரும் அலுவலர்கள் பங்குபற்றினார்கள்.

1. வளிமண்டலவியலாளர்கள் - 8
2. வளிமண்டல அலுவலர்கள் - 2
3. ஆராய்ச்சி உதவியாளர்கள் - 5



நீண்டகால வானிலை எதிர்வுகூறல்களின் பொருட்டு 10 வளிமண்டலவியலாளர்களையும், 4 ஆராய்ச்சி அலுவலர்களையும் பயிற்றுவிக்கப்பட்டதுடன், வளப்பகிர்வாளராக அமெரிக்காவின் IRI நிறுவனத்தின் அலுவலரொருவர் பங்குபற்றியதுடன், அவருக்கு நிதி ஒதுக்கீடு உலக வளிமண்டலவியல் சங்கத்தால் வழங்கப்பட்டது.

வானிலை எதிர்வுகூறல் நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டு 15 வளிமண்டலவியலாளர்கள் பங்குபற்றியதுடன் வளப்பகிர்வு ஜப்பான் வளிமண்டலவியல் முகவர் நிறுவனத்தால் வழங்கப்பட்டது. அவர்களின் நிதி ஒதுக்கீடு அந்த நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

3. நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவுகளில் செயலாற்றுகை

3.1 நிர்வாகப் பிரிவு

2015.12.31 ஆந் திகதியில் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியினரின் எண்ணிக்கை 460 ஆகியதுடன், உண்மையில் உள்ள பதவியினரின் எண்ணிக்கை 370 ஆகும்.

2015.12.31 ஆம் ஆண்டு இறுதியில் வளிமண்டலவியல் உத்தியோகத்தர்கள்/அவதானிப்பாளர்கள்/தொடர்பாடலாளர் பதவிகள் 27 ம், சிரே'ட வளிமண்டலவியலாளர் அலுவலர் பதவிகள் 17 ம், வளிமண்டலவியலாளர் உதவியாளர் பதவிகள் 16 ம் வெற்றிடமாக காணப்பட்டன.

3.1.1 ஆட்சேர்ப்பு/வெற்றிடங்கள் நிரப்புதல்

2015 ஆம் ஆண்டில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டன.

பதவிகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின்	
வளிமண்டலவியலாளர் (இ.வி.சே.)	11
பொது முகாமைத்தவ உதவியாளர்கள்	13
தச்சு தொழில்நுட்பவியலாளர்	01

3.1.2. ஓய்வுபெறல், பதவி விலகல், விடுவிப்புகள், பதவி வெறித்தாக்கல், இறப்புகள்.

திணைக்களத்தில் பல்வேறு பதவிகளில் பணியாற்றிய 07 அலுவலர்கள் 2015 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றுள்ளதுடன் 01 அலுவலர் சேவையிலிருந்து விலகியுள்ளார்.

3.1.3. ஓய்வு பெற்ற அலுவலர்களை மீண்டும் சேவையில் அமர்த்தல்

கடந்த 05 ஆண்டுக்குள் 08 அலுவலர்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் 2015 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டனர்.

3.1.4. உரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் மற்றும் திணைக்களத்துப் பரீட்சைகள் என்பன நடாத்தல்

திணைக்களத்தின் உள்ளக பரீட்சை பிரிவுடன் கூட்டிணைந்து இலங்கை விஞ்ஞான சேவையில் மற்றும் தொழில்நுட்பவியல் சேவையில் அலுவலர்களின் பொருட்டு நடாத்தப்பட வேண்டிய முதலாவது, இரண்டாவது திணைக்களத்துப் பரீட்சைகளும், வலிமண்டளவியல் உதவியாளர் பதவிக்கான முதலாவது, மூன்றாவது வினைத்திறன்காண் தடை பரீட்சைகளும் நடாத்தி பெறுபேறுகள் வழங்குவதற்கு 2015 ஆம் ஆண்டில் இயன்றுள்ளது.

3.1.5. நிருமாணிப்பு நடவடிக்கைகள்

நுவரெலியாவில் உள்ள சுற்றுலா விடுதிப் பொறுப்பாளருக்கான உத்தியோகபூர்வ இல்லம் நிருமாணிக்கும் நடவடிக்கைகளை முடிவுறுத்தி பங்களா காப்பாளரிடம் வழங்கப்பட்டுள்ளது. திருகோணமலை வளிமண்டலவியல் அலுவலகம் மற்றும் பலூன் அறையில் நிருமாணிப்பு பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

பிரதான அலுவலகத்தில் கட்டிடத்திற்கு வர்ணம் தீட்டப்பட்டு பழுதுபார்க்கப்பட்டதுடன், தேசிய வளிமண்டலவியல் நிலையத்தை பிரிக்கப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது

3.2நிதிப் பிரிவு

3.2.1 வருமானம்

2015 எதிர்பார்க்கப்படும் மற்றும் உண்மையான வருமானக் கணக்கு

தலைப்பு - 304 **நிகழ்ச்சித் திட்டம் - 02** **கருத்திட்ட இலக்கம் 01**

வருமான குறியீடு	விபரம்	2015 வருமானம்		விபரம்
		மதிப்பீடு ரூபா:	உண்மையான ரூபா:	
20.02.01.01	அரசாங்க ஆதன வாடகையிலிருந்து ஈட்டிய வருமானம், அரசாங்க கட்டிடங்களின் வாடகை	550,000	432,202	பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் வெளியக அலுவலகங்களில் முஜஊ உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகை
20.02.01.99	அரசாங்க ஆதன வாடகை - ஏனைய வாடகை வருமானம் - ஏனைய வாடகை	12,600	12,600	பணிப்பளார் நாயகம் மற்றும் 02 பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களுக்கான வாடகை
20.02.02.99	வட்டி - ஏனைய	1,500,000	1,214,036	வட்டி அரசாங்க ஊழியர்களுக்கான முற்பண “டீ”கணக்கு
20.03.02.99	விற்பனை - நிர்வாக கட்டணங்கள் - பல்வேறு	6,000,000	5,151,212	பல்வேறு துறைகளுக்கான தரவுகள் மற்றும் அறிக்கைகள் வழங்குவதன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் - உதா:- பல்கலைக்கழகம், ஒப்பந்தக்காரர்கள் ஆகியோர்)
20.03.99.00	விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - ஏனைய கிடைக்கப்பெறுதல்கள்	600,000	846,372	பாடசாலை அவதானிப்புகள், பாடசாலைகளுக்கான அறிக்கைகளை வழங்குதல், கேள்விகளை பதிவு செய்யும் கட்டணங்கள்
				போதனைகள், செயலமர்வுகள் என்பன நடாத்தல், கேட்போர் கூடத்தை ஒதுக்கிகொள்ளுதல், புத்தகங்களை விற்பனை செய்தல், நுவரெலியா சுற்றுலா விடுதியை ஒதுக்கிகொள்ளுதல்.
மொத்தம்		8,662,600	7,656,422	

<u>2015 ஒதுக்கீடுகள் - மீண்டுவரும் செலவீனங்கள் (ரூபா)</u>

வளிமண்டலவியல் திணைக்களம்

தலைப்பு - 304 நிகழ்ச்சித்திட்டம் 02

கருத்திட்ட இலக்கம் 01

தொகுதி	கருத்திட்டம் - 01		மூ	விபரம்
	ஒதுக்கீடு ரூபா	செலவு ரூபா		
ஆளுக்குரிய வேதனாதிகள்	186,388,000	185,645,921	100	சம்பளம் மற்றும் வேதனங்கள், மேலதிக நேர கொடுப்பனவுகள், லீவு நாள் சம்பளங்கள் மற்றும் படிகள்
ஏனைய மீண்டுவருஞ் செலவுகள்	68,792,000	62,887,040	91	
பிரயாணச் செலவுகள்	2,000,000	1,229,284	61	உள்நாட்டு பிரயாணச் செலவு வெளிநாட்டு பிரயாணச் சலெவு- வெளிநாட்டு கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள்
வழங்குதல்கள்	10,895,186	10,809,039	99	வளிமண்டலவியல் பலூன்கள், ரேடியொசொன்ட், சன்சயின்காட், எழுதுகருவிப் பொருட்கள், அலுவலக தேவைகளை கொள்வனவு செய்தல், எரிபொருள் மற்றும் மசகு உராய்வு நீக்கி, உணவு வகைகள் மற்றும் சீருடை
பேணல் செலவுகள்	13,283,473	11,065,411	83	வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் கட்டிடங்கள் பேணுதல் செலவுகள்
சேவைகள்	34,220,593	31,548,425	92	போக்குவரத்து சேவைகள், அஞ்சல் மற்றும் தொலைதொடர்பு சேவைகள் , மின்சாரம் மற்றும் நீர்கட்டணங்கள், வரிபணம்,வாடகை பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் மற்றும் ஏனைய செலவுகள்

சேவைகள் மாற்றுதல்கள்	8,363,341	8,205,475	98	உலக வளிமண்டலவியல் அமைப்புகள் மற்றும் ஏனைய வெளிநாட்டு அமைப்புகள் 3 இற்காக செலுத்தப்பட வேண்டிய உதவு தொகை மற்றும் அரசாங்க ஊழியர்களின் ஆதனக் கடன் வட்டடி
ஏனைய மீண்டு வரும் செலவுகள்	29,407	29,407	100	நட்டங்கள் மற்றும் வதிவழிப்புகள்
மொத்த செலவு	255,180,000	248,532,961		

2015 -ஒதுக்கீடுகள் - மூலதனச் செலவுகள் (ரூபா)

வளிமண்டலவியல் திணைக்களம்

தலைப்பு - 304 **நிகழ்ச்சித்திட்டம் - 02** **கருத்திட்ட இலக்கம் 01**

செலவு விடயம் குறிப்பு	செலவு விடய விபரம்	2015 தேறிய ஒதுக்கீடுகள் ரூபா :	2015 செலவு ரூபா :	மூ	விபரம்
	மொத்தம் (கருத்திட்டம் 01)	**348,000,000**	**111,531,151**	32	
கருத்திட்டம் 01	**வளிமண்டலவியல் சேவைகள்**				
	மொத்தம்	**348,000,000**	**111,531,151**	32	
	புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்கள்	**8,150,000**	**7,987,223**	98	
2001	கட்டிடங்கள் மற்றும் நிருமாணிப்புகள்	8,150,000	7,987,223	98	பிரதான அலுவலக கட்டிடத்தை மேம்படுத்தல் 6.39 மில்லியன் ரூபா -

					வவுனியா, நுவரெலியா மற்றும் புத்தளம் வளிமண்டலவியல் அலுவலகங்களில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மெற்கொள்ளப்பட்டுள்ளன.
	(மூலதன சொத்துக்களை கையேற்றல்)	**32,000,000**	**27,762,319**	**87**	
2102	தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	8,900,000	8,899,958	100	
2103	இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள்	14,000,000	12,445,603	89	வளிமண்டலவியல் உபகரணங்கள்(உ.நி)
2104	கட்டிடங்கள் மற்றும் நிருமாணிப்புகள்	8,600,000	5,926,415	69	திருகோணமலை வளிமண்டலவியல் அலுவலகத்தில் புதிய நிருமாணிப்புகள்
2105	காணி மற்றும் காணிகளை மேம்படுத்தல்	500,000	490,344	98	மன்னார் வளிமண்டலவியல் அலுவலகம் - பாதுகாப்பு வேலி நிருமாணித்தல்
	ஆற்றல் அபிவிருத்தி	**4,350,000**	**4,184,781**	**96**	
2401	பதவியினரின் பயிற்சி	4,350,000	4,184,781	96	பதவிநிலை அலுவலர்கள், தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத அலுவலர்களுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகள்
	ஏனைய மூலதன செலவுகள்	**303,500,000**	**71,596,827**	**24**	
2502	முதலீடுகள்	303,500,000	71,596,827	24	அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களின்

					பொருட்டு ரூபா. 964இ700 தன்னியக்க வளிமண்டலவியல் முறைமை - ரூபா. 10இ767இ604 வளிமண்டலவியல் அவதானிப்புகள், எதிர்வுகூறல்களை வழங்குதல் விநியோகித்தல் மற்றும் மேம்படுத்தல் ரூபா. 59,864,523

முற்பணக்கணக்கின் சாராம்சம் - 2015

தலைப்பு -

304 **நிகழ்ச்சித்திட்டம் - 02** **கருத்திட்ட இரக்கம் 01**

வகை	2015 மதிப்பீடு ரூபா :	2015 உண்மையான ரூபா :
அரசாங்க அலுவலர்களின் முற்பணக்கணக்கு		
செலவின் ஆகக்கூடிய எல்லை	12,695,000	11,498,951
கிடைக்கப்பெறுதல்களின் ஆகக்கூடிய எல்லை	7,695,000	10,372,207
பற்று மீதிகளின் ஆகக்கூடிய எல்லை	55,000,000	31,700,892

4. நன்றி நவிலில்

பல்வேறு கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கூட்டங்கள் என்பவற்றின்போது எமது நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய எல்லா அரசு மற்றும் அரசு சார்பற்ற அமைப்புகளுக்கும், நபர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் வளிமண்டலவியல் தகவல்களை பொது மக்களிடம் கொண்டுச் செல்கையில் ஊடகங்களினால் மேற்கொள்ளப்பட்ட சேவையின் பொருட்டு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக அளப்பரியா ஒத்துழைப்புடனும் நேர்மையாகவும் சேவை வழங்குதல் தொடர்பாக திணைக்களத்தின் எல்லா அலுவலர்களுக்கும் என்து நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.